மில்க்வைற் இலவச வெளியீடு:

## தேசிய வீரர் கௌரவ

# சேர். பொன்னம்பலம் இராமநாதன்

## அவர்கள்



INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA

# வாழ்க்கைச் சுருக்கம்

1147

உ

## தேசீய வீரர் கௌரவ

# சேர். பொன்னம்பலம் இராமநாதன்

## (16-4-1851 — 26-11-1930)

காடெல்லாம் வயலாக்கிக்
கதிர்முற்றிப் பழுக்கக்
கருணைகனி இன்ற தொரு
கற்பகக்கா வேந்தன்
நாடெல்லாம் நங்கையர்க்கும்
நம்பியர்க்கும் கலையாம்
நளினவிழி திறந்தொளிர
நயந்தளித்த பானு
கூடெல்லாம் ஆருயிர்கள்
கொடுவந்த பயனைக்
கூடவைக்க அவதரித்த
மெய்ஞானக் குரவன்
ஏடெல்லாம் பாட்டாகத்
தான்பொருளாய் இருப்போன்
ஈழமணி எனும் ராம
நாதனவன் வாழி!

—நவநீத. கிருஷ்ணபாரதியார்

இவ்வாறு புலவர்கள் போற்றப் புகழுடன் தோன்றிய சேர் இராமநாதனைக் கல்விமான், இலக்கிய விற்பன்னர், தத்துவசாஸ்திரி, ஞானவான், இராசதந்திரி, சீர்திருத்தவாதி, வழக்கறிஞன், சட்ட அறிஞர்நாயகம், சட்டத்துறைநாயகம், சட்டசபைப் பிரதிநிதி, மக்கள் தலைவன், பரோபகாரி, தாதா, சிந்தனையாளன், தீர்க்கதரிசி என்றெல்லாம் பெரியோர் பலவாருகக்கூறுவர்.

யாழ்ப்பாணத்து மானிப்பாயில் புகழுடன் வாழ்ந்த பொன்னம்பலத் தர்மவானுக்கும் அவரின் பொற்புடை மனைவி செல்லாச்சி அம்மையாருக்கும் பிறந்த மக்கள் மூவருள் மூத்தவர் குமாரசுவாமி, இரண்டாமவர் இராமநாதன், மூன்ருமவர் அருணுசலம். இவர்கள் மூவரும் இலங்கை ஆட்சிச்சபையை அலங்கரித்த அங்கத்தவராவர். இவர்களை ஈழத்துச் சிசில்கள் என்று ஆங்கிலேயர் புகழ்வது வழக்கம்,

இராமநாதன் 1851 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதினும் நாளிற் பிறந்து, கொழும்பிலுள்ள றேயற் கல்லூரியிலே ஆசிரியர் போக் என்பவரிடம் கல்வி கற்றபின் சிலகாலம் சென்னையிலுள்ள இராசதானிக் கல்லூரியிலும் பயின்ருர். சென்னை வாழ்க்கை இராமநாதனுக்கு ஒத்துப்போகாமையால் மீண்டும் றேயற் கல்லூரியிலே கல்வி கற்றபின், அக்காலத்திற் சிறந்து

விளங்கிய றிச்சாட் மோகன் என்னும் வழக்கறிஞரிடம் சட்டம் பயின்று, 1873 ஆம் ஆண்டில் தாமும் ஒரு வழக்கறிஞர் ஆயினர்.

இராமநாதனுடைய மாமனராய சேர் முத்துக் குமாரசுவாமி அவர்கள் நெடுங்காலமாக இலங்கைச் சட்டசபையிலே தமிழ்ப்பேசும் மக்களின் பிரதிநிதியாக இருந்தவர். அவருக்கு முன் அவரின் தந்தையார் ஆறுமுகத்தாபிள்ளை அங்கத்தவராய் இருந்தவர். சேர் முத்துக்குமாரசுவாமி 1879-ம் ஆண்டில் இறந்துபோக அவருடைய இடத்தில் இராமநாதனே இருத்தல் வேண்டும் என்று ஆறுமுகநாவலர் முதலான பெரியோர்கள் செய்த பிரசாரத்தால் இராமநாதன் இளம் வயதிலேயே சட்டசபைஅங்கத்தவரானர். அவர் 27-8-1879-ல் சட்டசபையை அலங்கரிக்கத் தொடங்கினர். அன்றிருந்து அவர் தமது எண்பதாவது வயதில் 1930 ஆம் ஆண்டில் இயற்கையெய்தும் வரை இலங்கையின் பெருந்தலைவராய் இருந்தார்.

இராமநாதனின் சேவையைப் பாராட்டிய ஆங்கிலேய அரசாங்கம் அவருக்கு 1889 ஆம் ஆண்டில் C. M. G. என்னும் பட்டத்தையும், 1903 ஆம் ஆண்டில் K. C. என்னும் பட்டத்தையும் வழங்கிற்று. அக்காலத்தில் அவரொருவரே அப்பட்டத்தைப் பெற்றவராவர்.

சட்டசபையில் சேர் இராமநாதனின் பேச்சுக்குத் தனி மதிப்பிருந்தது. ஐரோப்பியர் பலர் தமது ஓய்வு நேரங்களில் அவரின் பேச்சை நயப்பதற்காகச் சட்ட சபை மண்டபத்துக்குப் பேர்வது வழக்கமாயிருந்தது. ஐரோப்பிய அங்கத்தவராய கிறிஸ்ரி என்பாருடன் இராமநாதன் விவாதிப்பது பெரிய இலக்கிய விருந்தாய் இருந்தது என்பர். தனிப்பட்ட நட்பு பொதுமக்கள் சேவைக்குத் தடையாய் இருத்தலாகாது என்பதைத் தமது லட்சியமாகக் கொண்ட இராமநாதன், இறை சேரித் தலைவராய ஓபிரயின் என்பாருடன் சொற்போர் செய்த சிறப்பைக் கண்ட ஆங்கிலேயர், அவரை உத்தி யோகப்பற்றற்ற அங்கத்தவரின் ஒப்புயர்வற்ற பெருந் தலைவன் என்றும், ஈழத்துக் கிளாட்ஸ்ரோன் பிரபு என்றும் பாராட்டினர்.

இராமநாதன் சட்டசபையிலிருந்து இலங்கையருக் காகச் செய்த சேவை இத்துணை என எடுத்தியம்ப முடியாததாகும். அவர் சாதி, சமய, மொழி வேறு பாடு கருதாது பொதுமக்களுக்குத் தம் உயிரையும் பொருட்படுத்தாது தொண்டுசெய்த உத்தமர். அவர் கொண்டுவந்த அமைப்புக்கள், திருத்தங்கள், மாற்றங் கள் யாவும் சேவை மனப்பான்மையுடன் செய்யப் பட்டனவாகும். நீதிமன்றங்களின் திருத்தங்கள், பதிவு கள், கட்டளைச்சட்டப் பதிவுகள், ஆளுரிமைப் பதிவு

கள், தபாற்கந்தோர்ச் சேமிப்பு வசதிகள், கல்விச் சீர் திருத்தங்கள், சட்டத்தொகுப்புகள் முதலியன இராம நாதனின் விவேகத்தை விளக்குவனவாகும். அவரைப் போன்ற அரசியற் பிரதிநிதியொருவரை ஆசியாக் கண்டத்திலே காணமுடியாது என்று பிரடறிக் டோன் ஹொரஸ்ர் என்பார் கூறியுள்ளார். அவர் இலங்கைச் சட்டசபையின் பிரகாசமான ஒளி விளக்கு என்றும், இலங்கையின் புகழ்பெற்ற இரத்தினக் கல் என்றும் ஐரோப்பியர் பாராட்டினர். அக்காலத்துச் சட்டசபை அங்கத்தவர்களும் சட்டசபைக்குத் தலைமை பூண்டுவந்த ஆள்பதிகளும் இராமநாதனைப் புகழ்ந்து பாராட்டு வதை மறப்பதில்லை.

இராமநாதன் பலகாலம் சட்டத்துறை நாயகமா கவும், சட்ட அறிஞர் நாயகமாகவும் கடமையாற்றிப் புகழ் பெற்றார். இராமநாதன் சட்ட அறிஞர் நாயக மாகப் பதவி வகித்த காலத்திலே பிரதம நீதியரச ராய் இருந்த பொன்சர் என்பார், இராமநாதனை வெகுவாக அஞ்சினர். அதனால் அவர் இராமநாதனை அரசியல் வாழ்வில் ஈடுபடுதலே நல்லது என்று மனம் மாற்றி விட்டார் என்பர்.

இவ்வாறுக இலங்கைச் சட்டசபை 1911 ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்ட போது இலங்கை முழுவதும் ஒரு தேர்தல் தொகுதியாகவும், அதற்குப்

படித்தவர்களின் பிரதிநிதியாக ஒருவர் தெரியப்பெற லாம் என்னும் வாய்ப்பு முதன் முதலாகக் கிடைத்த போது, இலங்கை முழுவதிலும் செல்வாக்குப்பெற் றிருந்த இராமநாதன் தம்முடன் போட்டியிட்ட வைத்திய சிகாமணி மாக்கஸ் பர்ணுந்து என்பாரை வென்று இலங்கையின் ஏகபிரதிநிதியானுர். அவர் இரண்டாவது முறையாக 1916 ஆம் ஆண்டிலும் நியாயவாதி ஜயவர்த்தனுவை வென்று இலங்கையரின் அன்புக்குரிய அபிமானப் பிரதிநிதியாய் அங்கத்துவம் வகித்தார். அத்தகைய சிறப்பைப் பத்தாண்டுகள் வகித்து அனுபவித்தவர் இராமநாதன் ஒருவரேயாவர்.

இலங்கை மக்களின் இணையில்லாத தலைவர் என்ற தகுதியும் மேம்பாடும் பெற்ற தன்மையினுலேதான் அவர் இங்கிலாந்துக்குச் சென்று குடியேற்ற மந்திரி யாரைக்கண்டு அவர் நியமித்த இலங்கை ஆள்பதி ஒருவரைத் திரும்பிப்போகவுஞ் செய்தார். அவர் ஆங் கிலேயரின் போக்கையும், அவர்தம் அரசாங்கத்தின் அமைப்பையும் எவருக்கும் அஞ்சாது வன்மையாகக் கண்டித்துப் பேசியவை ஆங்கிலேயரைக் கண்விழிக்கச் செய்தன.

இராமநாதன் ஐம்பது ஆண்டுகளாகச் சட்டசபை யில் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவராயும், நியமன அங்கத்தவராயும், உத்தியோக அங்கத்தவராயும், தெரி

யப்பெற்ற அங்கத்தவராயும் இருந்தார். அத்தகைய தகுதியும் மேன்மையும் இலங்கையில் வேறெவருக்கும் எக்காலத்தும் இருந்ததில்லை. என்று கூறின் மிகையாகாது. இராம்நாதன் நியமன அங்கத்தவராய் இருந்த காலத்தில் 1921 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் புதுவருட கௌரவமாக அவருக்கு நைற் பட்டம் வழங்கப்பட்டது. அன்று முதல் அவர் சேர் இராம நாதப் பிரபு ஆயினுர்.

இராமநாதனின் முதுமைக் காலத்தில் 1924 ஆம் ஆண்டில் இலங்கைச் சட்டசபையில் ஆள்பதி மனிங் செய்த திருத்தத்தின் பயனுகச் சில மாற்றங்கள் செய் யப்பட்டன. அதிலே முதன் முதலாக ஒரு அங்கத்த வர் சட்டசபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பும் வாய்ப்பும் உண்டானபோது, ஆள்பதி உட்பட எல்லோரும் இராமநாதனையே தலைவராகத் தெரிய விரும்பினர். ஆனுல் இராமநாதன் தாம் தலைமை வகிப்பதாயின் நாட்டுக்குச் சேவை செய்யும் நல் வாய்ப்புக் குறைந்து போகலாம் எனக்கருதித் தம் நண்பர் சேர் யேம்ஸ் பீரிஸ் என்பாரையே தலைவராகப் பிரேரித்தார். அக்காலத்தில் சேர் இராமநாதன் வடமாகாணத்தின் வடபகுதியின் பிரதிநிதியாய் இருந்தார்.

ஒருவருக்கு அறிவு, ஆற்றல், செல்வம், செல்வாக்கு, ஈகை, பெருந்தன்மை ஆகிய பண்புகள் ஒருங்கே அமைவது அருமை என்பர். ஆனல் இவை யாவும் இராமநாதனிடம் ஒருங்கமைந்திருந்தன. இராமநாதன் இப்பண்புகளின் உறைவிடமாய் உருவமாய் இருந்தார். தங்கவிக்கிரகம் போன்ற உருவம், தலையிலே தலைப்பாகை, நெற்றியிலே திருநீறும் சந்தனமும், கருணைபொழியும் கண்கள், தாமரை இதழ் போன்ற வாயிற் புன்சிரிப்பு, நெஞ்சை அலங்கரிக்கும் நீண்ட உத்தரியம் ஆதியன இராமநாதனின் அழகுக்கு அழகு செய்தன. அவரின் அறிவும் திருவும் உருவும் எவரையும் அவருக்குப் பணிய வைத்தன.

இளமைக்காலந் தொடக்கம் இராமநாதனுக்கு கீழைத்தேச் கலாசாரத்திலும், சைவசித்தாந்த நெறியிலும் பேரபிமானம் இருந்தது. அவர் சைவசித்தாந்த அறிவை விருத்தி செய்வதற்கு ஆகமங்களை நன்கு பயில்வதற்கு வடமொழியைப் பயின்று அருள்பராநந்தர் என்னும் பெரியாரிடம் தம் அறிவை வளம்படுத்திக்கொண்டார். அவர் திருவாசகத்தில் அதிக பற்றுள்ளவராய் இருந்தார். அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் சைவசமய தத்துவங்களைப் பேசி அவற்றை நன்கு பரப்பியுள்ளார். அவர் அமெரிக்காவில் சைவசமயத்தைப் பரப்ப உதவி செய்தவர் மைறன்

பெல்ப்ஸ் என்னும் அமெரிக்கப் பெரியாராவர். இராமநாதன் அமெரிக்காவில் சைவசமயத்தின் மேன்மையைப் பேசிய அருமையைப் பாராட்டிய அரசஞ் சண்முகனார் என்னும் புலவர் பெருந்தகை பின்வருமாறு பாடிப் புகழ்ந்துள்ளார்.

புகழ்பெற்ற சங்கரரும் பரதகண்டத்
    தார்க் கன்றிப் புகன்ற தில்லை
அகல்வானத் தாதவனும் நம்பகலில்
    பார்த்தறியா அமெரிக்காவும்
தகவுடைய பிறநாடு நீசென்று
    ஞானமொழி தழைப்பப் பெய்தாய்
மிகவுடை நின்கீர்த்தி யெம்மனோ
    ரொரு நாவால் விளம்பற் பாற்றோ.

சேர் இராமநாதன் பல்லாயிரம் பொன் செலவு செய்து பெண்களுக்கும் ஆண்களுக்கும் என இருபெருங் கல்லூரிகளை நிறுவினர். அவர் நிறுவிய இராமநாதன் கல்லூரியும் பரமேஸ்வராக் கல்லூரியும் அவரின் புண்ணியக் கண்கள் என நிலவி, இன்று பல்கலைக் கழகமாகப் பரிணமித்துள்ளன. சைவப்பிள்ளைகள் குருகுல வாசஞ் செய்து ஞானசாத்திரம், புராணேதிகாசங்கள்

பயில்வதற்கு வசதி செய்வதே தமது நோக்கு என்பதைக் கல்லூரிகளின் கோட்பாட்டு வாசகத்தால் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**திரிகரண சுத்தியும்**
**காரிய சித்தியும்**
**அருள்வாய்.**

இராமநாதன் தமது தந்தையார் நிறுவிய பொன்னம்பலவாணேசுவரர் கோயிலின் தர்மகர்த்தாவாக இருந்த காலத்தில் அதனைச் சோழ மன்னர் செய்த கோயிற்றிருப்பணியோடொப்பக் கைதேர்ந்த சிற்பிகளைக் கொண்டு கருங்கல்லால் கட்டுவித்தார். தமது ஓய்வு நேரங்களில் ஞானசாத்திரங்களை நன்கு பயின்று, தமது ஆஸ்தான வித்துவான்களோடு கலந்துரையாடி அவற்றுக்கு உரையும் விளக்கமும் எழுதிப் பதிப்பித்தார்.

இலங்கைச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முதலாவது தலைவராயிருந்ததோடு சென்னைச் சைவ சித்தாந்த சமாஜத்தின் முதலாண்டுக் கூட்டத்திலும் தலைவராயிருந்து பணி செய்துள்ளார்.

இராமநாதன் இலங்கைத் தேசிய வீரருள் ஒருவராய், மதிப்புக்குரிய முதிர்ந்த தமிழ்ப் பிரபுவாய் இருந்து தமது எண்பதாம் ஆண்டில் இயற்கை எய்தினர்.

மன்னவையி லொருமணியாய்
மருவலர்தம் வயமிழக்க மழைபெய்மேகந்
தன்னிகர்பன் னூலுரைகள்
தந்தகட லத்துவித சைவஞானி
என்னலமும் பிறர் நலமா
யெவ்வுயிருந் தன்னுயிரா யெண்ணும்
மேதை
பொன்னியல்சேர் பொன்ராம நாதனெனும்
புலவர்கோன் புகழ்மிக் கோனே.

—பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

—ஆக்கம்—

க. சி. குலரத்தினம்



INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA

இப் புத்தகத்தை வாசித்த
பின்னர் தயவு செய்து
பிறருக்குங் கொடுத்து
உதவுங்கள்.

# இராமநாதன்
# முத்திரை வெளியீட்டுதின

அன்பளிப்பு

## - மில்க்வைற் -

காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

4-9-1975

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.